# நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி – 607 801,

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பாகம் II 4(b) ன் படி கீழ்க்கண்ட விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**II 4(b) (i)** **நிறுவனம் தொடர்பான தகவல்கள் செயல்பாடுகள் மற்றும் பணிகள்**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் பழுப்பு நிலக்கரி உற்பத்தி மற்றும் மின் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனம் ஆகும். இந்நிறுவன விவகாரங்கள் இதன் இயக்குநர்கள் குழுவினால் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்திற்கு சொந்தமான கீழ்க்கண்ட தொழிலகப்பிரிவுகள் என்.எல்.சி இயக்கி வருகிறது.

i. ஆண்டிற்கு 105 லட்சம் டன்கள் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் முதல் சுரங்கம்

ii. ஆண்டிற்கு 30 லட்சம் டன்கள் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் சுரங்கம் - IA

iii. ஆண்டிற்கு 105 லட்சம் டன்கள் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் இரண்டாம் சுரங்கம்

iv. 600 மெகாவாட் திறன் கொண்டி முதல் அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின் சக்தியில் என்.எல்.சி நிறுவனத்தின் தேவை நீங்கலாக எஞ்சிய மின்சக்தி தமிழக மின் வாரியத்திற்கு வழங்கப்படுகிறது.

v. முதல் அனல் மின் நிலைய விரிவாக்கம் : 420 மெகாவாட் திறன் கொண்ட இந்த மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின் சக்தி ஆந்திரம் நீங்கலாக அனைத்து தென் மாநில மின் வாரியங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

vi. இரண்டாம் அனல் மின் நிலையம் : இம் மின் நிலையம் 1470 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இங்கு உற்பத்தியாகும் மின்சக்தி அனைத்து தென்னிந்திய மின்வாரியங்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

vii. ஆண்டிற்கு 21 லட்சம் டன்கள் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் பர்சிங்சார் சுரங்கம், ராஜஸ்தான் மாநிலம் மற்றும் 2ஜ125 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் மின்நிலையம்

மேலும் தகவல்களை NLCன் வெப்சைட் www.nlcindia.comல் காணவும்.

**II 4 (b) (ii)** **அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் அதிகாரிகள் மற்றும் பணிகள்:**

நிறுவனத்தை சுமூகமான முறையில் நடத்திச் செல்லும் வகையில் அதிகாரிகளுக்கு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நோக்கத்தினை அடையும் வகையில் பணியாளர்கள் செய்ய வேண்டிய பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தேவைக்கு ஏற்றாற் போல் அதிகாரம் மற்றும் பணிகள் மாற்றியமைக்கப்படும்.

**II 4 (b) (iii)** **முடிவுகள் எடுக்கும் தருணத்தில் பின்பற்றப்படும் செயல்முறைகள் (மேற்பார்வை மற்றும் முழுப்பொறுப்பு ஏற்கும் அதிகாரிகளின் வழிமுறைகள் உட்பட)**

1956ம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தில் உள்ள ஷரத்துக்களின் அடிப்படையிலும் இந்திய அரசால் அறிவிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கிணங்க நிர்வாகத்தின் இயக்குநர்கள் குழு அதிகாரங்களை நிர்ணயிக்கும். நிறுவனம் சிறப்பாக இயங்கும் வகையில் நிறுவனத்தின் இயக்குநர் குழு சில நிதி மற்றும் நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்களை நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்கு பிரித்து வழங்கியுள்ளது. அதுபோன்று இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு சில அதிகாரங்களை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பிரித்து வழங்கியுள்ளார். அதிபர், இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் நிர்வாக காரணங்களுக்காக, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் சிலவற்றை மூத்த அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளனர். அதிபர், இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் தங்களால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு முற்றிலும் பொறுப்பாகிறார்.

**II 4 (b) (iv)** **பணிகளை மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவீடுகள்:**

இந்நிறுவனம் பழுப்பு நிலக்கரி மற்றும் மின் உற்பத்தி ஆகிய இரு பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அவ்வாண்டிற்கான உற்பத்தி இலக்குகளை நிர்ணயிக்கும் வகையில் ஒரு வருடாந்திர திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது. 2010-2011ம் ஆண்டிற்காக இந்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட உற்பத்தி இலக்குகள் கீழே தரப்பட்டுள்ளன.

**சுரங்கங்கள்**

| வ. எண் | சுரங்கங்கள் | மேல் மண் (லட்சம் கன மீட்டர்கள்) | பழுப்பு நிலக்கரி (லட்சம் டன்கள்) |
|---|---|---|---|
| 1 | முதல் சுரங்கம் | 540.00 | 88.00 |
| 2 | சுரங்கம் - IA | 200.00 | 25.50 |
| 3 | இரண்டாம் சுரங்கம் மற்றும் விரிவாக்கம் | 750.00 | 110.00 |
| 4 | பர்சிங்சார் சுரங்கம் | 91.00 | 17.90 |
| | **கூடுதல்** | **1581.00** | **241.40** |

**அனல்மின் நிலையங்கள்**

| வ. எண் | அனல்மின் நிலையங்கள் | மொத்த மின் உற்பத்தி (கோடி யூனிட்டுகளில்) |
|---|---|---|
| 1 | அனல்மின் நிலையம்-I | 3784.00 |
| 2 | அனல்மின் நிலையம்-I விரிவாக்கம் | 2944.00 |
| 3 | அனல்மின் நிலையம்-II | 9658.00 |
| 4 | அனல்மின் நிலையம்-II விரிவாக்கம் | 948.00 |
| 5 | பர்சிங்சார் அனல்மின் நிலையம் | 1424.00 |
| | **கூடுதல்** | **18758.00** |

**II 4 (b) (v) இந்நிறுவனப் பணியாளர்கள் தங்கள் பணிகளை நிறைவேற்ற வழிகாட்டுதல்களாக இந்நிறுவனம் வகுத்துள்ள விதிமுறைகள், அறிவுறுத்தல்கள் கையேடுகள் மற்றும் ஆவணங்கள்**

நிறுவனத்தில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக என்.எல்.சி. பல விதிமுறைகள் வகுத்துள்ளது. முக்கியமான வழிகாட்டிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. நிர்வாகம் தொடர்பான கையேடு
2. கொள்முதல் தொடர்பான கையேடு
3. கணக்குகள் தொடர்பான கையேடு
4. ஒப்பந்தம் தொடர்பான கையேடு

**II 4 (b) (vi) நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆவணங்களைத் தெரிவிக்கும் அறிக்கை**

என்.எல்.சி தனது வர்த்தகம் தொடர்பான வணிகம் மற்றும் தொழில்நுட்ப ஆவணங்களுடன் பணியாளர்கள் தொடர்பான தகவல்களையும் பராமரித்து வருகிறது.

**II 4 (b) (vii) நிறுவனத்தின் கொள்ளைகளை வரையறுக்கும்போது அல்லது அமல்படுத்தும் நேரத்தில் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து அல்லது ஆலோசனைகளைப் பரிசீலிப்பது போன்று ஏற்கனவே இருக்கும் செயல்முறைகள்**

இந்நிறுவனத்தின் முக்கிய வர்த்தகமாகத் திகழ்வது, மின்சக்தி உற்பத்தி செய்தல், இந்த மின்சக்தியின் விற்பனை விலைகள், மத்திய மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. அந்த ஆணைய விதிகளின்படி, புதிய மின் கட்டணங்களை நிர்ணயிக்கும்போது பொதுமக்களின் கருத்துகளையும் மறுப்புகளையும் ஆணையத்திடம் தெரிவிக்கக்கோரி என்.எல்.சி நிறுவனம் விளம்பரப்படுத்துகிறது.

புதிய திட்டங்கள், ஒப்புதல் பெறப்படுவதற்கு முன்பாகவே அத்திட்டம் குறித்து அந்தந்த மாவட்ட ஆட்சியரால் பொதுமக்களுடன் ஒரு கலந்தாய்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**II 4 (b) (viii) நிறுவனத்திற்கு வழிகாட்டுவதற்காக இரண்டு அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் தொடர்பான விபரங்கள் இதுபோன்ற குழுக்களின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள பொதுமக்கள் அனுமதிக்கப்படுகிறார்களா அல்லது அக்கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளை பொதுமக்களால் பார்வையிட முடியுமா என்பது குறித்த விபரங்கள்.**

சட்டபூர்வமான விதிமுறைகளுக்கிணங்க, இந்நிறுவனத்தின் அனைத்து விவகாரங்களும் இயக்குநர் குழுவினால் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது. தேவைப்படும் இடங்களில் உயர் அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகிறது. சட்டப்படியாக அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மற்றும் அமைப்புக்கள் நீங்கலாக, நிறுவனத்தின் செயல்பாடுகளை சுமூகமான வழியில் நடத்துவதற்காக டெண்டர் குழு, பதவி உயர்வுக்குழு, கொள்முதல் குழு போன்ற பல்வேறு குழுக்கள் தேவைக்கேற்ப அமைக்கப்படுகின்றன. பல்வேறு மட்டங்களில் அமைக்கப்படும் இக்குழுக்கள் முடிவு எடுக்கும் அதிகாரிகளுக்கு அல்லது இயக்குநர் குழுவிற்கு வழிகாட்டுவதுடன் உதவி புரிகின்றனர். இதுபோன்ற குழுக்கள் மற்றும் இயக்குநர் குழுக்கள் உதவி புரிகின்றனர். இதுபோன்ற குழுக்கள் மற்றும் இயக்குநர் குழுக்கள் நடத்தும் கூட்டங்களில் பொதுமக்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்துடன் இக்குழுக்களின் பரிந்துரைகள் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படமாட்டாது.

எனினும், ஒரு குறிப்பிட்ட கருத்து தொடர்பாக அதன் விபரங்களை அதிகமான அளவில் பொதுமக்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள் என்று தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005ன் படி பணியமர்த்தப்பட்டுள்ள மத்திய மக்கள் தகவல் அதிகாரி திருப்தியடைந்தால், அந்தக் குறிப்பிட்ட கருத்து தொடர்பான அனைத்து முடிவுகளும் நிறைவேற்றப்பட்ட பின்பு அது பொதுமக்களின் பார்வைக்கு வழங்கப்படலாம். மேலும் இயக்குநர் குழுவில் அல்லது வேறு குழுக்களில் எடுத்த நடிவடிக்கைகள், அக்குழுவின் முன் அனுமதியைப் பெறாமல் பொதுமக்களிடம் வழங்கப்படமாட்டாது.

**II 4 (b) (ix) நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த விபரங்கள்**

31-03-2010 அன்றைய நிலையில், நிறுவனத்தில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| அதிகாரிகள் | பணியாளர்கள் | தொழிலாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 4,150 | 7,901 | 6,041 | 18,092 |

முதன்மை அதிகாரிகள் குறித்த விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
(15.02.2011ன்படி)

| பெயர் திருவாளர்கள் | பதவி | அலுவலகத் தொலைபேசி எண் |
|---|---|---|
| A.R. அன்சாரி | தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் | 04142-252280 |
| சரத்குமார் ஆச்சார்யா | இயக்குநர், மனிதவளம் | 04142-252220 |
| B. சுரேந்திர மோகன் | சுரங்கத்துறை இயக்குநர் | 04142-252270 |
| R. கந்தசாமி | திட்டம் & செயலாக்கத்துறை இயக்குநர் | 04142-252384 |
| K. சேகர் | இயக்குநர்/நிதி | 04142-252240 |
| J. மகிழ்செல்வன் | மின்துறை இயக்குநர் | 04142-252570 |
| K.S. பாலசுப்பிரமணியன் | காவல்துறை மற்றும் கண்காணிப்புத்துறை தலைமை அதிகாரி | 04142-250326 |
| V. சந்திரமோகன் | Executive Director – நிதி | 04142-250324 |
| B. சிவஞானம் | Executive Director /திட்டம், ஒப்பந்தம் | 04142-252215 |
| S. இராஜகோபால் | தலைமை அதிகாரி (நெய்வேலி தமிழ்நாடு மின்நிறுவனம் (NTPL) | 0461-2352122 |
| G. ராமகிருஷ்ணன் | தலைமை பொது மேலாளர்/கன்வேயர்/SME | 04142-228354 |
| S. ராஜகோபால் | தலைமை பொது மேலாளர் (மாழிய மேலாண்மை) | 04142-228296 |
| P.T. ஷண்முகசுந்தரம் | தலைமை பொது மேலாளர்/மருத்துவம் | 04142-252381 |
| S. இராமலிங்கம் | செயல் இயக்குநர் (இரண்டாம் சுரங்கம்-I) | 04142-228376 |
| K. பால்பாண்டி | தலைமை பொதுமேலளார்/TS-II | 04142-257716 |
| S. குமாரசாமி | தலைமை பொதுமேலாளர் (சுரங்கம்-II) | 04142-262252 |
| K. அழகர் | தலைமை பொது மேலாளர் - (சுரங்கம்-IA) | 04142-228469 |
| வீரபிரசாத் | தலைமை பொது மேலாளர்(சுரங்கம்-I) | 04142-229278 |
| K. ஜான் சைமன் | தலைமை பொது மேலாளர் (சேவைகள்) நிலத்தடிநீர் நிர்வாகம் மற்றும் சுரங்கத்துறை, மின்சாரம் | 04142-252657 |
| C. செந்தமிழ் செல்வன் | தலைமை பொது மேலாளர் (நகர நிர்வாகம்) | 04142-252396 |

**II 4 (b) (x)** ஒவ்வொரு மாதமும் நிறுவன அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் விதிகளின் படி பெறும் இழப்பீட்டுத்தொகை உட்பட பெறும் ஊதியம் தொடர்பான விபரங்கள்

| பதவி | ஊதிய விகிதம் |
|---|---|
| தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் | Rs.80,000-125000 |
| இயக்குநர் | Rs.75000-100000 |
| செயல் இயக்குநர் | Rs.62000-80000 |
| தலைமை பொது மேலாளர் | Rs.51300-73000 |
| பொது மேலாளர் | Rs. 51300-73000 |
| துணை பொது மேலாளர் | Rs.43200-66000 |
| தலைமை மேலாளர் | Rs.36600-62000 |
| கூடுதல் தலைமை மேலாளர் | Rs.36600-62000 |
| துணை தலைமை பொறியாளர் | Rs.32900-58000 |
| முதுநிலை பொறியாளர் | Rs. 32900-58000 |
| செயற்பொறியாளர் | Rs.29100-54500 |
| உதவி செயற்பொறியாளர் | Rs.20600-46500 |
| கூடுதல் பொறியாளர்/பட்டப் பொறியாளர் (பயிற்சி) | Rs.20600-46500 |
| உதவி பொறியாளர் | Rs.8600-250-14600 |
| இளநிலை பொறியாளர் நிலை-I | Rs.6400-1800-10720 |
| இளநிலை பொறியாளர் நிலை-II | Rs.6050-170-10130 |
| பட்டயப் பொறியாளர் (பயிற்சி) | Rs. 5750-160-9590 |
| தொழிலாளர் நிலை - 8 | Rs. 6395-180-10715 |
| தொழிலாளர் நிலை - 7 | Rs. 6050-170-10130 |
| தொழிலாளர் நிலை - 6 | Rs. 5750-160-9590 |
| தொழிலாளர் நிலை - 5 | Rs. 5500-150-9100 |
| தொழிலாளர் நிலை - 4 | Rs. 5300-140-8660 |
| தொழிலாளர் நிலை - 3 | Rs. 5150-130-8270 |
| தொழிலாளர் நிலை - 2 | Rs. 5000-120-7880 |
| தொழிலாளர் நிலை - 1 | Rs. 4900-110-7540 |
| தொழிலாளர் நிலை - 0 | Rs. 4685 |
| தொழிலகப் பயிற்சியாளர்/சுரங்கவியல் | Rs. 10000-100-20000 |

மேற்கண்ட ஊதியவிகிதங்களுடன் ஒவ்வொரு காலாண்டிற்கும் மாறுகின்ற பஞ்சப்படி, விதிமுறை, மருத்துவ வசதி, விடுமுறை நாள் பயண சலுகை, போக்குவரத்து செலவினை ஈடுகட்டுதல், சேமநல நிதி, பணிக்கொடை போன்ற இதர சலுகைகள் நிறுவன விதிகளின்படி பெற அனைத்து நிரந்தரப் பணியாளர்களும் தகுதியானவர்கள் ஆவர்.

**II 4 (b) (xi) நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிநிலை, எதிர்பார்க்கப்படும் செலவீனங்களின் அறிக்கை.**

பழுப்பு நிலக்கரி மற்றும் மின்உற்பத்தி இலக்கினை எட்ட,2010-11ம் ஆண்டில், கீழ்க்கண்டநிதிநிலை ஒதுக்கீடுகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| வருவாய் ஈட்டும் செலவுகள் | - | 3278.34 கோடிகள் |
| திட்டம் சாராத முதலீடுகள் (இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் மாற்றுதல்) | - | 300.00 கோடிகள் |
| புதிய திட்டங்களுக்கான முதலீடுகள் (இரண்டாம் சுரங்கம் மற்றும் இரண்டாம் அனல்மின் நிலைய விரிவாக்கம் ராஜஸ்தான் மாநில திட்டங்கள்) | - | 1983.46 கோடிகள் |

இந்த ஒதுக்கீடுகளுக்கு எதிராக செலவு செய்யப்பட்ட தொகை நிதியாண்டின் இறுதியில் தெரியவரும். மத்திய அரசிடமிருந்து என்.எல்.சி. எவ்விதமான நிதியுதவிகளையும் பெறுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**II 4 (b) (xii) மானியம் பெறும் திட்டங்களை செயல்படுத்தும் முறை அதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அதுபோன்ற திட்டங்களின் மூலம் பயன் பெறுபவர்களின் விபரங்கள்.**

என்.எல்.சி. நிறுவனத்தைப் பொறுத்தவரையில், இன்றைய நிலையில் மானியம் பெறுகின்ற திட்டங்கள் எதுவும் பொதுவாக இல்லை.

**II 4 (b) (xiii) சலுகைகள் உரிமங்கள் மற்றும் அங்கீகாரம் பெறுபவர்கள் குறித்த விபரங்கள்**

இன்றைய நிலையில் எந்த அமைப்பிலும் சலுகைகள் உரிமங்கள் மற்றும் அங்கீகாரங்களை என்.எல்.சி வழங்கவில்லை. இருப்பினும் சில அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு பணியாளர்களின் நலன் கருதி வங்கிகள், பள்ளிகள், கடைகள் போன்றவை நடத்த அனுமதி மற்றும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**II 4 (b) (xiv) மின்னணு முறையில் பெறப்படும் தகவல்கள் தொடர்பான விபரங்கள்**

இது தொடர்பாக என்.எல்.சி நிறுவன இணையதளம் www.nlcindia.com பார்க்கவும்.

**II 4 (b) (xv) பொதுமக்கள் தகவல்களைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நூலகம், படிப்பகம் போன்றவைகள் குறித்த தகவல்கள் மற்றும் பணி நேரங்கள்**

நெய்வேலி நகரியத்தில் என்.எல்.சி ஒரு நூலகத்தினை நடத்தி வருகிறது. அனைத்து நாட்களிலும் இயங்கும் இந்நூலகம் வார நாட்களில் காலை 07,30 முதல் இரவு 08,00 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 08,00 மணி முதல் மதியம் 01,00 மணி வரையும் செயல்படும்.

அத்துடன் வட்டம்-5, 8, 25, 29 ஆகிய நான்கு இடங்களில் என்.எல்.சி படிப்பகங்களை நடத்தி வருகிறது.

**II 4 (b) (xvi) மக்கள் தகவல் அதிகாரிகளின் பெயர், பதவி மற்றும் இதர விபரங்கள்**

<u>மத்திய மக்கள் தகவல் அதிகாரி:</u>
திரு. S. ஸ்ரீதர், தலைமை மேலாளர் (மக்கள் தொடர்பு)
மக்கள் தொடர்பு அலுவலகம், வட்டம்-2
நெய்வேலி 607 801
தெலைபேசி 04142 253679 (அலுவலகம்)
04142 252379 (வீடு)
மின் அஞ்சல் cpio@nlcindia.com

திரு, N. சதீஷ் பாபு,
துணை பொது மேலாளர் (நிர்வாகம்)
சுரங்க அலுவலகம், சுரங்கம்-ஐஐ
நெய்வேலி-2
மின் அஞ்சல்:sadishbabu.n@nlcindia.com

திரு. ஜார்ஜ் ஜேக்கப்
தலைமை பொது மேலாளர்/IE
தலைமை அலுவலகம், வட்டம்-I
நெய்வேலி-607801
தெலைபேசி 04142-252298 (அலுவலகம்)
04142-253434 (வீடு)
மின் அஞ்சல் dgm.ie.co@nlcindia.com

திரு. R. விக்ரமன், துணைப்பொது மேலாளர் (நிர்வாகம்)
அனல்மின் நிலையம்-II
நெய்வேலி 607 807
தொலைபேசி 04142 252611 (அலுவலகம்)
04142 253307 (வீடு)
மின் அஞ்சல் ramanvikraman@nlcindia.com

திரு. R. சீத்தாராமன், பொது மேலாளர் (நிதி)
தலைமை அலுவலகம், வட்டம்-1
நெய்வேலி 607 801
தொலைபேசி 04142 251961 (அலுவலகம்)
04142 229433 (வீடு)
மின் அஞ்சல் rsraman@nlcindia.com

திரு. U. தயாளன்
துணை முதன்மை மேலாளர் (நிர்வாகம்)
கண்காணிப்புத்துறை
வட்டம்-8, நெய்வேலி-607801
தொலைபேசி 04142-252589 (அலுவலகம்)
மின் அஞ்சல் udayalan@gmail.com

மேல் முறையீட்டு அதிகாரி:
திரு. C. செந்தமிழ் செல்வன்
தலைமை பொது மேலாளர்/நகர நிர்வாகம்
வட்டம்-10, நெய்வேலி - 607 801.
மின் அஞ்சல் senthamilselvan.c@nlcindia.com

மேல் முறையீட்டு அதிகாரி: (நகர நிர்வாக தொடர்புடைய மேல்முறையீடுகள் மட்டும்)

திரு. பெஞ்சமின் ராயப்பன்,
பொது மேலாளர் (நிர்வாகம்)
தலைமை அலுவலகம், வட்டம்-1
நெய்வேலி-607801
மின் அஞ்சல்: benjamin@nlcindia.com

திரு. M. சுகுமார், துணைப்பொது மேலாளர்
கல்வித்துறை, வட்டம்-18, நெய்வேலி 607 803
தொலைபேசி 04142 252279 (அலுவலகம்)
04142 256027 (வீடு)
மின் அஞ்சல் dgm.education@nlcindia.com

திரு. K. பெரியசாமி, துணைப் பொது மேலாளர் (நிர்வாகம்)
தலைமை அலுவலகம், வட்டம்-1
நெய்வேலி 607 801
தெலைபேசி 04142 252078 (அலுவலகம்)
04142 256284 (வீடு)

திரு. R. மோகன், பொது மேலாளர் (நிதி)
நிதித்துறை, தலைமை அலுவலகம், வட்டம்-1
நெய்வேலி 607 801
தொலைபேசி 04142 253424 (அலுவலகம்)
04142 268112 (வீடு)
மின் அஞ்சல் dgm.s.@nlcindia.com

திரு. N. சங்கர்
துணை பொதுமேலாளர் (நிர்வாகம்)
சுரங்கம்-I அலுவலகம், நெய்வேலி-607801.
தொலைபேசி: 04142-228528 (அலுவலகம்)
04142-256284 (வீடு)
மின் அஞ்சல்: sankaran@nlcindia.com

திரு. R. மோகன்
துணை பொதுமேலாளர் (நிர்வாகம்)
சுரங்கம்-IA அலுவலகம், நெய்வேலி-607801.
தொலைபேசி: 04142-254837 (வீடு)
மின் அஞ்சல்: mohanr@nlcindia.com

திரு. N. பாலாஜி,
துணை பொதுமேலாளர் (நிர்வாகம்)
CSU நிர்வாக அலுவலகம், நெய்வேலி-607801.
தொலைபேசி: 04142-282287 (வீடு)
மின் அஞ்சல்: balajin@nlcindia.com

திரு. V. சுகுமார்,
துணை தலைமை மேலாளர் (நிர்வாகம்)
நகர நிர்வாக அலுவலகம், வட்டம்-10
நெய்வேலி-607801.

திரு. P. சங்கரராஜ்,
துணை தலைமை மேலாளர் (நிர்வாகம்)
மருத்துவமனை அலுவலகம், நெய்வேலி-607801.
தொலைபேசி: 04142-256806 (வீடு)
மின் அஞ்சல்: sankararajp@nlcindia.com

திரு. V. சௌந்தரராஜன்,
தலைமை மேலாளர் (நிர்வாகம்)
சர்வீஸ்/சி.டி.ஓ அலுவலகம்,
நெய்வேலி-607801.
மின் அஞ்சல்: soundararajanv@nlcindia.com

திரு. M. சுந்தரமூர்த்தி,
தலைமை மேலாளர் (நிர்வாகம்)
பயிற்சி வளாக அலுவலகம்,
நெய்வேலி-607801.
மின் அஞ்சல்: sundaramurthym@nlcindia.com

திரு. S. மனோகரன்,
துணை பொது மேலாளர் (நிர்வாகம்)
மாழிய மேலாண்மை அலுவலகம்,
நெய்வேலி-607801.
தொலைபேசி: 04142-254784 (வீடு)
மின் அஞ்சல்: smano54@gmail.com

**II 4 (b) (xvii) குறிப்பிடதக்க வகையில் உள்ள பிற தகவர்கள்; இத்தகவர்கள் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மாற்றியமைக்கப்படும்.**

விதிகளின்படி தற்போதுள்ள கட்டண விபரங்கள்

| **வ.எண்** | **விபரம்** | **கட்டணம்** |
|---|---|---|
| 1 | விண்ணப்பக் கட்டணம் | 10.00 |
| 2 | காகிதங்களில் தகவல்கள் வழங்க ஒரு பக்கத்திற்கு | 2.00 |
| 3 | மென்தகட்டில் தகவல் வழங்க | 50.00 |
| 4 | குருந்தகடு மூலம் தகவல் வழங்க | 50.00 |
| 5 | ஆவணங்களை பார்வையிட முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணமில்லை. அடுத்து வரும் ஒவ்வொரு கால்மணி நேரத்திற்கும் அல்லது அதற்கு குறைவான நேரத்திற்கு | 5.00 |
| 6 | அச்சாக்கம் செய்யப்பட்டுள்ள புத்தகங்கள் - அதன் விலை அல்லது அதனை பிரதி எடுக்க ஒரு பக்கத்திற்கு | 2.00 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இக்கட்டணங்களை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட (Neyveli Lignite Corporation Limited) வரைவுக் காசோலை அல்லது வங்கிக் காசோலைகள் மூலமாக அனுப்பினால் மட்டுமே விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இது தவிர இதர வழியில் கட்டணங்கள் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

தகவல் பெற விண்ணப்பிக்கப்படும் மனுக்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள (பத்தி xiv) படி மக்கள் தகவர் அதிகாரி என்ற முகவரிக்கு அனுப்பினால் மட்டுமே அனுமதிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.